


# இனவாத யுத்தத்துக்கும் இராணுவமயத்துக்கும் எதிராக சோசலிச வேலைத் திட்டத்தின் கீழ் அணிதிரளுங்கள் !

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக
மத்திய குழுவின் அறிக்கை - 1995.11.15

தொழிலாளர் பாதை வெளியீடு

தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள்

மகாநாட்டு அழைப்பு!

# இனவாத யுத்தத்துக்கும் இராணுவமயத்துக்கும் எதிராக சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரளுங்கள்!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக
மத்திய குழு அறிக்கை 1995-11-15

முதற் பதிப்பு — டிசம்பர், 1995

வெளியீடு:
தொழிலாளர் பாதை வெளியீட்டாளர்கள்,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10.

அச்சகம்:
பியதாச அச்சகம்,
இல.51, நாகஹவத்த வீதி,
மகரகம.

ISBN 955—9123—37—8

# இனவாத யுத்தத்துக்கும் இராணுவமயத்துக்கும் எதிராக சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரளுங்கள்!

---

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக
மத்திய குழுவின் அறிக்கை= 15–11–1995

---

பொதுஜன முன்னணி அரசாங்கம் நாடு பூராவும் நடாத்திவரும் வேட்டைகளையும் மனிதப்படுகொலை மட்டத்துக்கு உயர்த்தியுள்ள தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினையும் வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அந்த யுத்தத்தினை நிறுத்தவும் தமிழ் மக்களை பாதுகாக்கவும் அரசியல் முன்நோக்குடன் அமைப்பு ரீதியில் கிளர்ந்து எழுமாறு தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது. அது நாடு பூராவும் உள்ள தமிழ், சிங்கள தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் பாதுகாப்பினை உத்தரவாதம் செய்வதற்கு அவசியமான தயாரிப்பின் இன்றியமையாத நடவடிக்கையாகும்.

''பிறிதோர் தேசிய இனத்தினை ஒடுக்குகின்ற எந்தவொரு தேசிய இனத்துக்கும் விடுதலை கிடையாது''. இது நீண்ட காலமாக ருசுப்படுத்தப்பட்டுள்ள புகழ்பெற்ற மார்க்சிச மேற்கோளாகும். அவ்வாறே முதலாளித்துவ அரசினால் ஒடுக்கப்படுகின்றதும் சுரண்டப்படுகின்றதுமான எந்தவொரு ஒடுக்கப்படும்

மக்கட் குழுவையும் பாதுகாக்க முன்வராத மக்களால் தமது பாதுகாப்பை ஊர்ஜிதம் செய்து கொள்ளவும் முடியாது.

பன்னிரண்டு ஆண்டுகளாக தமிழர் விரோத இனவாத யுத்தத்தினை நடாத்த யூ.என்.பி —பொதுஜன முன்னணி ஆட்சிகளால் ஆயுதபாணியாக்கப்பட்ட முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு இடமளித்துள்ளதன் கொடிய பெறுபேறாக முழு நாட்டினதும் மக்களது உரிமைகள் நசுக்கப்பட்டு, கைகால்களுக்கு மாட்டப்பட்ட விலங்குகளின் கனிசமான முடிச்சுக்கள் ஏற்கனவே இறுக்கப்பட்டுள்ளன.

அக்டோபர் 17ம் திகதி இலங்கை இராணுவத்தினால் கட்டவிழ்க்கப்பட்ட 'ரிவிரச' இராணுவ நடவடிக்கைகள் யாழ்ப்பாண நகரை நெருங்கியதைத் தொடர்ந்து 500,000க்கும் அதிகமான தமிழ் மக்கள் தமது குழந்தை குட்டிகளையும் விடுவாசல்களையும் விட்டு வெளியேறி உள்ளனர், இந்த இராணுவ நடவடிக்கையின் இலக்கு விடுதலைப் புலிகளை அழித்து, தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதே என்ற அப்பட்டமான பொய்யின் பேரில் தமிழ் மக்கள் காட்டிக் கொண்ட வெறுப்பும் நிராகரிப்பும் நன்கு அம்பலமாகியுள்ளது.

'ரிவிரச' இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமான நாளில் இருந்து தமது மீட்பு நடவடிக்கை பற்றி வாயடிப்புகளில் ஈடுபட்ட இராணுவம் தமது இந்த நடவடிக்கைக்கு உதவுமாறு மீண்டும் மீண்டும் கோரியது. ஆனால் இராணுவ நடவடிக்கை ஆரம்பமான முதல் நாளில் இருந்து மக்கள் கிராமங்களை விட்டோடுவது ஆரம்பமாகியது. இன்று இராணுவம் போரிடுவது யாழ்ப்பாணத்தில் இல்லாத மக்களை இரட்சிக்கவே! முதலாளித்துவ அரச படைகளின் நடவடிக்கைகளின் கீழ் பொது மக்களின் உயிர் வாழ்க்கைக்கு திட்டவட்டமான முறையில் தொடுக்கப்பட்டுள்ள கொலைகார அச்சுறுத்தலை புரிந்து கொள்ள வடக்கிலும் சரி தெற்கிலும் சரி மக்களுக்கு புதிய அனுபவம் அவசியம் இல்லை.

வடக்கில் மக்கள் படுகொலைகளிலும் இரத்தக் களரிகளிலும் ஈடுபட்டுள்ள இராணுவப் படைப் பிரிவுகளின் கொடிய நிழலாட்டம் தெற்கில் உள்ள தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களதும் படகுக்கு எதிராக தொடுக்கப்பட்டதாகும் என்பதை 1987 — 1990 காலப்பகுதியின் அனுபவம் நிரூபித்துள்ளது. அன்று இந்திய இராணுவத்தின் உதவியோடு ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்களையும் யுவதிகளையும் யூ.என்.பி. இராணுவ நடவடிக்கைகள் தெற்கில் துவம்சம் செய்தது. பொதுஜன முன்னணி அரசாங்கம் இன்று தொடுத்துள்ள இராணுவ நடவடிக்கை, இந்திய ஆட்சியாளர்களதும் அவ்வாறே முக்கிய ஏகாதிபத்திய வல்லரசுகளதும் ஆசிர்வாதங்களையும் இராணுவ உதவிகளையும் பெற்றுக் கொண்டுள்ளது. இது உண்மையில் பிரேமதாச —ரஞ்சன் விஜேரத்ன காலத்தில் இடம்பெறாத பிரமாண்டமான அளவிலான ஒரு இரத்தக் களரி நடவடிக்கையாகும்.



வடக்கு — கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினை 5 இலட்சம் மக்களை வீடு வாசல்களற்ற அகதிகளாக்கும் மக்கட் படுகொலை மட்டத்துக்கு உயர்த்தவும் நாடு பூராவும் தமிழ் மக்களை சித்திரவதை கூடங்களில் தள்ளவும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் ஒத்துழைப்பும் நவசமசமாஜ கட்சி, ஜே.வி.பி, உட்பட்ட சிங்கள, தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் ஆதரவையும் கொண்ட ஒரு பொதுஜன முன்னணி (மக்கள் முன்னணி) அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வது அவசியமாகியது. இதற்குக் காரணம், 1994ம் ஆண்டளவில் யூ.என்.பி, அரசாங்கத்தினால் 11 ஆண்டுகளாக நடாத்தப்பட்டு வந்த இனவாத யுத்தம் தொடர்பாக மக்களின் எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வந்த நிலையில் அந்த யுத்த எதிர்ப்பு பொதுஜன அபிப்பிராயத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்து இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொதுமக்களை அரசியல் குழப்ப நிலைக்குள் தள்ளுவது என்பது ஒரு பிற்போக்கு முதலாளித்துவ பொதுஜன முன்னணியின் உதவி இல்லாமல் சாத்தியம் இல்லாமல் இருந்ததேயாகும்.

பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்ததும் ஆரம்பமான சமாதான பேச்சுவார்த்தைகள் எனப்பட்டவற்றினதும் யுத்த நிறுத்தத்தினதும், முதலாளித்துவ கையாட்களின் பாராட்டுதல்களுக்கு உள்ளாகியுள்ள 'அதிகாரப் பரவலாக்கல் தீர்வினதும்' கொலைகார இலக்குகள் இனவாத யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரான மக்கட் படுகொலை மட்டத்துக்கு உயர்த்தப்பட்டதோடு வெளியரங்குக்கு வந்தது. விடுதலைப் புலிகளுடன் பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்தி வந்த மோசடி சமாதானப் பேச்சுவார்த்தைகளும் யுத்த நிறுத்தமும் அவ்

வாறே 'அரசியல் தீர்வையும்' தமிழ் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்கும் நடவடிக்கைகளாகத் தூக்கிப்பிடித்தவர்கள் சகலரும் இனச் சங்கார யுத்தத்தில் நீராடியவர்களாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளனர்.

அக்டோபர் 17ம் திகதி ஆரம்பமான 'ரிவிரச' இராணுவ நடவடிக்கை முதல் மாதத்தில் 1500 விடுதலைப்புலி போர்ராளிகளை கொன்றதாக இராணுவ தலைமையகம் அறிவித்தது. அக்காலப்பகுதியில் 2000க்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் அறிவிக்சப்பட்டது. செய்தித் தணிக்கைகளின் கீழ் இராணுவப் பேச்சாளர் சமர்ப்பித்த இப்புள்ளி விபரங்கள் இதைக் காட்டிலும் அதிகமாக இருக்க வேண்டும் என நினைப்பது எவருக்கும் கடினம் அல்ல. கொலையுண்ட, காயமடைந்தவர்களிடை யே அதிக எண்ணிக்கையிலான பொதுமக்களும் அடங்குவது நிச்சயம்.

நவம்பர் 1ம் திகதி நீர்வேலி சந்தியை கைப்பற்ற இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் மட்டும் 200க்கு அதிகமான விடுதலைப் புலிகள் போராளிகள் காயமடைந்ததாக இராணுலத் தலைமையகம் குறிப்பிட்டது. இச்சமயத்தில் இராணுவத்தினால் கொல்லப்படுவதை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்கள் ஆயிரமாயிரமாக தமது நகரங்களையும், கிராமங்களையும் விட்டு வெளியேறி வந்தனர்.

நீர்வேலி இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்டதோடு — அதில் இருந்து 5 மைலுக்கு அப்பால் உள்ள யாழ்ப்பாண மக்களும் நகரை விட்டு வெளியேறத் தொடங்கினர். தென்மராட்சிக்கும் கிளாலி படகுச் சேவை ஊடாக கிளிநொச்சிக்கும் தப்பியோடிய மக்கள் எண்ணிக்கை 5 இலட்சத்தையும் தாண்டியுள்ளது. முன்னொரு போதும் இல்லாத விதத்தில் ஒரு சில தினங்களில் இந்தளவு பிரமாண்டமான மக்கள், அனாதைகளாகி தமது வீடு வாசல்களை துறந்து வெளியேறுவது இனவாத முதலாளித்துவ பொதுஜன முன்னணி ஆட்சியின் காட்டுமிராண்டித் தன்மையை வெளிக்காட்டியுள்ளதோடு விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ நடவடிக்கைகளின் வங்குரோத்தையும் கூடவே நன்கு பறைசாற்றியுள்ளது.

தென் மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி தொழிலாளர்கள், கிராமப்புற ஏழைகள், இளைஞர்களுக்கும் அடிமேல் அடி கொடுத்து அவர்களின் தொழில், ஜீவனோபாயங்



களையும் வாழ்க்கையையும் நாசமாக்கிவரும் ஒரு முதலாளித்துவ ஆட்சியின் கொலைகார இராணுவத்தின் எதிரில் தமது சகல வளங்களுக்கும் பாதுகாப்பே கிடையாது என்பதை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வடக்கில் வாழும் தமிழ் மக்கள் மந்தபுத்தி படைத்தவர்கள் அல்லர். தெற்கின் துரோகத் தலைவர்களாலும் அவ்வாறே விடுதலைப் புலிகளாலும் தெற்கின் பொதுஜனங்களுக்கும் ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கும் இடையே முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக ஒரு தோழமைக் கூட்டு தவிர்க்கப்பட்டுள்ள ஒரு நிலைமையின் கீழ் இந்தப் பேராபத்து மேலும் உக்கிரம் கண்டது. இராணுவ ஆக்கிரமிப்புடன் தோன்றும் பேரழிவு அச்சுறுத்தலை உரிய விதத்தில் புரிந்து கொண்ட தமிழ் மக்கள் தம்வசம் இருந்த சகலதையும் கைவிட்டுவிட்டு உயிர் தப்பும் பொருட்டு-பல தலைமுறைகளாகத் தாம் வசித்து வந்த பிரதேசங்களில் இருந்து வெளியேறினர். இது இந்தக் கொலைகார இராணுவம் வடக்கில் தாம் அடையும் வெற்றி எனப்பட்டதை கொண்டு தம்மை பலப்படுத்திக் கொண்டு தெற்கின் பொதுமக்களுக்கு எதிராகத் தொடுக்கும் கொடிய தாக்குதல்களையும் — அத்தகைய ஒரு நிலைமையின் கீழ் வளர்ச்சி காணும் இராணுவ சர்வாதிகார ஆபத்தினை தோற்கடிக்க அவசியமான தயாரிப்புக்களையும் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் செய்யாது போனால் முழு நாட்டினதும் மக்களும் எத்தகைய ஒரு பேரழிவுக்கும் முகம் கொடுக்க நேரிடும் என்பதற்கான ஒரு முன் அறிகுறியாகும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இந்த எச்சரிக்கையை தீர்க்கமான ஒன்றாகக் கொள்ளும்படி சகல வர்க்க நனவு கொண்ட தொழிலாளர்களையும் கிராமப்புற ஏழைகளையும் இளைஞர்களையும் நாம் வேண்டுகின்றோம்.

இராணுவ ஆக்கிரமிப்பினால் தொடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு மேலாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் உக்கிரமாக்கப்பட்ட பட்டினி மட்டத்தையும் தாண்டும் உணவு, மருந்து தட்டுப்பாடு தமிழ் மக்களை யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேற தள்ளியுள்ளது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வெளியிட்ட அறிக்கையின்படி இந்த ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அவசியமான அரிசி, மாவில் அரைவாசிக்கும் குறைவாகவே வழங்கப்பட்டுள்ளது.

வழங்கப்படும் இந்த அற்ப

சொற்ப உணவுப் பொருட்களிலும் பெரும் பங்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் தமது படைகளுக்கும் அதிகாரத்துவத்தின் பாவனைக்குமெனக் கைப்பற்றப்பட்டு விடுகின்றது என்பது பொதுஜன முன்னணி அரசாங்கம் அறியாதது அல்ல. எனினும் யாழ்ப்பாணத்தின் அதிகார பலத்துக்காக விடுதலைப் புலிகளுடன் இராணுவப் போட்டியில் பொதுமக்களை பலிகடாக்களாக்கும் காட்டுமிராண்டி நோக்கத்தை பொதுஜன முன்னணி அரசாங்கம் மாற்றிக் கொண்டது இடையாது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தமிழ் குழந்தைகள் பாலுணவு தட்டுப்பாட்டினால் உயிர்துறப்பதைத் தவிர்க்கும் பொருட்டு தாய்மார் கருப்ப நீரினை ஊட்டுவதாக செய்தி வெளியான சமயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அக்டோபர் 24ம் திகதி அமெரிக்காவில் வெளிநாட்டு உறவு சபையில் பேசுகையில்

''இடம் பெற்று வரும் மோதுதல் நடைபெறுகையில் உணவு, மருந்து மற்றும் வசதிகளை வடக்குக்கு வழங்க அரசாங்கம் தடைவிதிக்கவில்லை என்ற விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்'' என வெட்கமின்றிக் கூறியுள்ளார்.

மனித உயிர்கள் பற்றி அணுவளவு அக்கறையும் இல்லாத முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தமது கொலைகார வேலைத் திட்டங்கள் அம்பலமாகுவதன் மூலம் குழம்பக் கூடிய உலக பொதுஜன அபிப்பராயத்தினை ஸ்தம்பிதம் அடையச் செய்வதற்கான ஒரு சூழ்ச்சியாக ஜனாதிபதியின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சிறப்பாக வடக்கின் தமிழ் மக்கள் மீது இதுவரை காலமும் கொண்டிருந்த பிடி தகர்ந்து போய் வருவது இராணுவ ஆக்கிரமிப்பின் முன் நிலையில் மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைவிட்டு வெளியேறியதன் மூலம் அம்பலமாகியது. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேறக் கூடாது என கட்டளையிட்டிருந்தனர். ஆனால் அந்த அமைப்பினால் தமது பாதுகாப்பை உத்தரவாதம் செய்து கொள்ள முடியாது என்பதை புரிந்து கொண்டதும் மக்கள் அந்தக் கட்டளையைப் பொருட்படுத்தாமல் வெளியேற ஆரம்பித்தனர். அதைத் தடுக்க முடியாது போனதும் விடுதலைப் புலிகள் ஒளாலி படகுச் சேவையைக் கொண்டு அவர்களின் பயணத்துக்கு இடமளித்தனர், கிளிநொச்சி. தென்மராட்சி பகுதிகளுக்கு வந்த மக்கள் மீது மீண்டும் ஒரு தடவை தமது பிடியை இறுக்க விடுதலைப் புலிகள் எடுக்கும் முயற்சிக்கும் மக்களின் எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வருவதாகத் தெரிகிறது.



## விடுதலைப் புலிகளின் வெளியேற்றம்

விடுதலைப் புலிகளும் கூட மிகக் குறுகிய காலத்துள் இரண்டு கிழமைகளுக்குள் 1000க்கும் அதிகமான தமது படையினரை பலி கொடுத்ததோடு யாழ்ப்பாணத்தில் தமது நிர்வாக மையம் உட்பட்ட முகாம்களையும் விட்டு வெளிபேறத் தள்ளப்பட்டனர். இலங்கை இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தின் சில கட்டங்களில் என்னதான் வீரத்தையும் உயிர்த்தியாகத்தையும் காட்டிக் கொண்டாலும் விடுதலைப் புலிகள் முதலாளித்துவ வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் அனைத்துலகவாத ஐக்கியத்துக்கு முரணாக நின்று கொண்டிருக்கும் வரை, அத்தகைய சகல தேசியவாத முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அமைப்புக்களும் அடிபணியவே நேரிடும் என்ற உண்மைக்குப் புறம்பாக விடுதலைப் புலிகளால் விளங்க முடியாது என்பதை இது காட்டிற்று, முதலாளித்துவ தேசியவாத அமைப்புக்கள் தற்காலிக இராணுவ வெற்றிகளை ஈட்டிக் கொண்டாலும் அதை ஏகாதிபத்திய, ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கத்துடன்—தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் மக்களின் பேரில் அன்றி – தமது வர்க்கத்துக்கு வாய்ப்பான நலன்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை செய்து கொள்ளும் துரும்பாக்கி கொள்கின்றது. தோல்வியைத் தவிர்க்கும் பொருட்டு முன்னர் இந்திய, தமிழ்நாடு முதலாளி வர்க்கங்களின் ஆதரவுடன் செயற்பட்டு வந்தல் மூலம் புலிகள் தென் இந்தியாவில் மட்டுமன்றி வட இந்தியாவிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவை இழந்தது. இறுதியில் இந்திய ஆளும் வர்க்கம் தொடுத்த மிலேச்ச ஒடுக்குமுறைக்கும் உள்ளானது, இருப்பினும் இவற்றில் இருந்து முதலாளித்துவ விடுதலைப் புலிகள் பெற்ற படிப்பினை பூஜ்யமாகும். தமது முதலாளி வர்க்கத் தன்மைக்கு ஏற்ப தற்போது இராணுவ தோல்விக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் அது பிரமாண்டமான மனித சங்காரங்களின் வழிகாட்டியான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உட்பட்ட பிற்போக்கு சக்திகளின்

ஆதரவை நாடியுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் வெளியிடப்படும் 'இன்சயிட் ரிப்போர்ட்' என்ற பத்திரிகை அக்டோபர் 19ம் திகதி வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டது:

''சமீபத்தில் நேருக்குநேர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எதிர்ப்புக்கும் அவநம்பிக்கைக்கும் மத்தியில் தகர்ந்து போனதோடு இராணுவத் தீர்வுகள் மூலம் பிரச்சினை மேலும் குழப்பியடிக்கப்பட்டுள்ளது. மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் இடையே நல்லெண்ணம் அவநம்பிக்கையினாலும் எதிர்ப்பினாலும் தகர்க்கப்பட்டுள்ளதோடு இந்தத் தீர்க்கமான தருணத்தில் கட்சிச் சார்பற்ற மூன்றாவது தரப்பினரின் உதவியும் தலையீடும் இல்லாமல் இந்த நீண்டுவரும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதைப் பற்றி நினைப்பதே கடினம்,''

ஏகாதிபத்தியவாதிகளின் எதிரில் ''தீர்வு'' காண்பது பற்றி இங்ஙனம் முறைப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவசியமான தீர்வினை இந்நாட்டின் உள்ளும் இந்தியத் துணைக்கண்டப் பிராந்தியத்தின் உள்ளும் உருவாக்கும் கையாட்களாகச் செயற்படும் தமது தயார் நிலையை நடைமுறை மூலம் நிரூபிக்க முன்வந்துள்ளனர். ஒரு புறத்தில் தம்மால் விடுதலை செய்யப்பட உள்ளதாக கூறிக்கொள்ளும் தமிழ் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை அடக்குமுறை மூலம் நெருக்கித் தள்ளி ஏகாதிபத்திய முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கும் பாணியிலான அடிமை உழைப்பு படையாக மாற்ற முடியும் என விடுதலைப் புலிகள் காட்டிக் கொண்டுள்ளது, மறுபுறத்தில் தமது அதிகாரப் பிராந்தியமாகப் பேர் குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு—கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்—முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும் அவ்வாறே சிங்கள ஏழை விவசாயிகளுக்கு எதிராகவும் படுகொலை பரிமாணத்திலான இனவாத காடைத்தனத்தினைக் கட்டவிழ்த்துவிட்டு வருகின்றது. இதன் மூலம் அம்மாகாணங்களில் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் முதலாளித்துவ எதிர்ப்பு கூட்டுப் போராட்ட பலத்தினை உடைத்து எறிய அது ஏற்கனவே செயற்பட்டுள்ளது. இலாப வெறி கொண்டு அலையும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் மிலேச்ச உழைப்பு சுரண்டல் நிலைமைகளை சிருஷ்டிக்கும் இந்த இனப்பிரிவினைவாத நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் இலங்கையினதும் இந்தியத் துணைக்கண்ட பிராந்தியத்தினதும் ஆளும் வர்க்கங்களின் மிலேச்ச நடவடிக்கைகளுக்கு மட்டுமே இரண்டாம் தரமானது.



## திரைமறைப்பு கேடயம்

விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளின் திரைமறைப்பு கேடயமாக மாறி யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க மறுத்து தமிழ் மக்கள் வேறு பிரதேசங்களுக்கு வெளியேறுகையில் அவர்கள் இவ்விடயங்களை கவனத்தில் கொள்ளாது விட்டிருப்பார்கள் என கூறிவிட முடியாது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத இராணுவ ஆக்கிரமிப்பினைப் போலவே விடுதலைப் புலிகளின் இந்நடவடிக்கைகள் தொடர்பாகவும் மக்களின் வெறுப்பு இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது என நாம் கூறக் காரணம் அதுவே.

தமிழ் மக்களின் விடுதலையைச் சிருஷ்டிக்கும் பொருட்டு தனியான ஒரு அரசினை நிறுவப் போகின்றோம் என 1970 பதுகளின் கடைப் பகுதியில் தோன்றிய பல்வேறு தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களில் பலவும்—புளோட், ஈ.பி.ஆர்.எல்.எப் டெலோ, ஈரோஸ், ஈபீடீபீ—சிங்கள இனவாத முதலாளித்துவ கொலைகார ஆட்சியின் அப்பட்டமான கைத்தேங்காயாக மாறியுள்ள அதே வேளையிலும், விடுதலைப் புலிகளின் முதலாளித்துவ வேலைத் திட்டத்தின் வங்குரோத்தும், பிற்போக்கும் வெளிப்பட்டுள்ள நிலையிலும் அதன் வாய்ப்புக்களை பயன்படுத்தி பொதுஜன முன்னணி அரசாங்கம் வடக்கு—கிழக்கு தமிழ் மக்கள் மீது இராணுவ ஆட்சியைத் திணிக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி உள்ளது. தமிழ் மக்கள் உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டுக்கு உள்ளாகி பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் என கூறினார் என்பதற்காக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பொன்னம்பலம் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டார். தமிழ் மக்கள் இன்று இலட்சக்கணக்கில் அகதிகளாக வந்து சேர்ந்துள்ள கிளிநொச்சியின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் இதற்கு மறுநாள் தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் விடுதலை செய்யப்பட்ட போதிலும் இவை அம்மாவட்டங்களில் சிவில் நிர்வாகத்தினை இராணுவப் பிடியினால் நசுக்கித் தள்ளுவதற்கான அறிகுறிகளாகும்.

## தணிக்கை

இராணுவ நிர்வாகத்துக்கு மாறிச் செல்லும் நடவடிக்கைகள் வடக்கு—கிழக்கு மாகாணங்களுடன் கட்டுப்பட்டு நின்றுவிடவில்லை. இராணுவ நடவடிக்கைகள் பற்றி பேசும் அல்லது கருத்து வெளியிடும் உரிமையை முழுமனே தடைசெய்யும் இராணுவத் தணிக்கை பத்திரிகைகள் மற்றும் வெளியீடுகள் மீது திணிக்கப்பட்டுள்ளது, செய்தித் தணிக்கையின் அதிகாரிகள் எந்த விதத்தில் இராணுவத்தின் பிடியில் தொழிற்படுகின்றார்கள் என்றால் அவர்கள் இராணுவம் சமர்ப்பித்த அறிக்கைகளின் புள்ளிவிபரங்களைக் கூட இராணுவத்துக்கு வாய்ப்பான முறையில் மாற்றிக் கொண்டுள்ளார்கள் எனத் தெரியவருகின்றது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் இதுவரை காலமும் அங்கீகரிக்கப்பட்டு இருந்த இராணுவ—பொலிஸ் நடவடிக்கைகளை சிவில் நிர்வாகத்துக்கு உட்பட்டு நடாத்திச் செல்லும் நிலைமைக்குப் பதிலாக மக்களின் ஜனநாயக, சிவில் உரிமைகளுக்கு மேலாகத் தொழிற்படும் ஒரு சக்தியாக இராணுவம் மாறியுள்ளது,

தொழிலாளர் — ஒடுக்கப்படும் போராளிகளுக்கு எதிராக உளவு பார்க்கவும் அவர்களை பொலிஸ்-இராணுவம் கைது செய்து வைத்திருக்கும் உளவாழிகளாக தொழிற்படவும் பொதுமக்களை பயமுறுத்துபவர்களாக செயற்படவும் சிவில் பாதுகாப்பு கமிட்டிகள் என்ற பேரில் காடையர் கும்பல்கள் கிராமத்துக்கு கிராமம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1970பதுகளின் ஆரம்பத்தில் கூட்டரசாங்கத்தின் கீழ் ஜேவீபியை வேட்டையாடும் சாட்டில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்களை கொல்லவும் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோரை சிறைகளுக்குள் தள்ளவும் செயற்பட்ட ''மக்கள் கமிட்டிகள்'' எனப்படுபவற்றை தாண்டிச் செல்லும் நடவடிக்கைகளைப் பொறுப்பேற்ற குண்டர் கமிட்டிகளாக இவை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் செயற்படும். அக்டோபர் 29ம் திகதி கட்டுநாயக்க, ஆண்டி அம்பலம பகுதியில் ''தொழிலாளர் பாதை'', 'கம்கறு மாவத்த'' பத்திரிகை விற்பனை செய்து அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களை அரசாங்க பிரதியமைச்சர் ஒருவரின் தூண்டுதலின் பேரில் குண்டர்கள் தாக்கியமை இதற்குச் சாட்சி பகர்கின்றது.



1983ல் யூ.என்.பீ.யினால் நிறைவேற்றப்பட்ட இராணுவத்துக்கு கட்டாயமாக ஆட்திரட்டும் மசோதாவினை நடைமுறைப்படுத்தி, இளைஞர்களை பலவந்தமாக இராணுவத்தில் சேர்க்கும் திட்டங்கள் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. இந்தச் சகல எதிர்ப்புரட்சி வேலைகளுக்கும் அவசியமான அரச பயங்கரவாத சூழ்நிலையை நாடு பூராவும் உருவாக்கும் பொருட்டு பாடசாலைகள் திடீரென மூடப்பட்டதோடு சகல கிராமங்களிலும் இராணுவ ஆட்திரட்டல்கள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன.

1995/96 வரவு செலவுத் திட்டத்தில் தொழில் நிபுணத்துவம் கொண்ட ஊழியர்களை யுத்தத்தின் கையாட்களாக்கும் பொருட்டு புதிய வரியும் விதிக்கப்பட்டுள்ளது. மாதாந்தம் ரூபா.15000/-க்கு மேற்பட்ட வருமானம் பெறுவோரிடம் இருந்து நூற்றுக்கு 2வீத வரியும் ரூபா.30000/க்கு கூடிய வருமானம் பெறுவோரிடம் இருந்து நூற்றுக்கு 3% வரியும் இராணுவ நடவடிக்கைக்கு பங்களிப்புச் செய்யும் பொருட்டு அறவிடப்படும். பிரதி நிதியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அறிவித்ததன்படி இது ''சுமையைத் திணிப்பதைவிட இராணுவ நடவடிக்கையில் மக்களை இணைத்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாகும்.'' இது முழு நாட்டினையும் யுத்த அடிப்படையில்—இராணுவ அடிப்படையில் நிறுத்தும் நச்சுத்தனமான ஆரம்ப நடவடிக்கையாகும்.

இச்சகல நடவடிக்கைகளும் முழு நாட்டிலும் இராணுவ சர்வாதிகாரத்தினை நிறுவும் திசையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும், பொதுஜன முன்னணி நடாத்திவரும் பொனபாட்டிச ஜனாதிபதி ஆட்சியினதும் அதனால் தொடுக்கப்பட்டுள்ள இனவாத யுத்தத்தினதும் பின்னணியில் கட்டி வளர்க்கப்பட்டு வருவது அதுவே.

இராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் சகல ஜனநாயக உரிமைகளையும் துடைத்துக் கட்டி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தின் மேல் கொடிய தாக்குதல் தொடுக்காமல் சமாளிக்க முடியாத ஒரு பொருளாதார நெருக்கடிக்கு ஆளும் வர்க்கம் முகம் கொடுத்துள்ளது.

அரச சொத்துக்கள், தோட்டங்கள், பக்டரிகளை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கும் அவற்றுடன் சேர்ந்து செயற்படும் முதலாளித்துவ வர்த்தகர்களுக்கும் அற்ப தொகைக்கு விற்றுத்தள்ள யூ.என்.பி. ஆட்சியின் கீழ் தயாரிக்கப்பட்டு, பொது

ஜன முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் திட்டங்கள் கூட உரிய பலன் தருவதாக இல்லை. பொகவந்தலாவை, வட்டவளை முதலான தோட்டங்களின் பங்குகள் பங்குச் சந்தைகளில் விற்பனைக்கு விடப்பட்ட போதிலும் முழுப் பங்குகளில் 30% தன்னும் விற்பனையாகவில்லை. பொதுவில் நோக்குமிடத்து கொழும்பு பங்குச் சந்தையில் பங்குகளின் விலை வீழ்ச்சி இவ்வருடம் பூராவும் தொடர்ந்து இடம்பெற்றுவந்துள்ளதோடு 1994ன் இறுதியில் இருந்த மட்டத்தில் சரி அரைவாசிக்கும் கீழாக வீழ்ச்சி கண்டுள்ளது.

பூகோளமயமான உற்பத்தி, வர்த்தக முறையின் கீழ் பூகோளமயமான உழைப்புச் சந்தையில் குறைந்த விலைக்கு உழைப்பைச் சுரண்டுவதை தேடி அலைவது ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்களின் விதிமுறையாக உள்ளது. இலங்கைத் தொழிலாளர்கள் இன்னமும் தமது உரிமைகள் பிடுங்கப்படுவதற்கு எதிர்ப்புக் காட்டும் போராட்டங்களில் ஈடுபடும் நிலைமையின் கீழ் இந்த ஏகாதிபத்திய மூலதனச் சொந்தக்காரர்கள் மிகவும் காட்டுமிராண்டி நிலைமைகள் இருந்து வரும் நாடுகளுக்கு இழுபட்டுச் செல்கின்றனர். அதன் மூலம் இந்நாட்டின் பொதுஜன முன்னணி அரசாங்கத்திடம் அவர்கள் மிலேச்ச இராணுவ ஆட்சியின் மூலம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளி தமக்கு அவசியமான நிலைமைகளை உருவாக்கித் தரும்படி நெருக்கி வருகின்றனர். பியகமவில் செரமிக் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இரண்டு பக்டரிகள் தமது வர்த்தக நடவடிக்கைகளை சுருட்டிக் கொண்டு முதலாளிகளுக்கு பொருத்தமான மலிவு உழைப்பு நிலைமைகள் இருந்து வருவதாகச் சொல்லப்படும் பங்களாதேசக்கு அல்லது தென்ஆபிரிக்காவுக்குச் செல்லப் போவதாக கொரியன் கம்பனி நவம்பர் ஆரம்பத்தில் விடுத்த மிரட்டல் அத்தகைய ஒன்றாகும்.

ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் மூலதன ஆளுமைக்கு கீட்பட்டு தத்தமது நாடுகளிலும் பிராந்தியங்களிலும் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை பேரழிவுக்குள் தள்ளுவதை விட வேறுபணி வரலாற்று ரீதியில் பின்தங்கிய நாடுகளின் முதலாளி வர்க்கத்துக்குக் கிடையாது. அவர்கள் தத்தமது பிராந்தியங்களிலும் ஆட்சிகளிலும் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் மக்கட் குழுக்களின் இறைமையைப் பற்றி செய்யும் கதையளப்புக்கள் பெரும்



வெட்கக்கேடானவை. அவை தாம் ஏகாதிபத்தியச் சார்பாக இருந்து கொண்டுள்ளதை பொது மக்களிடம் இருந்து மூடிமறைக்கப் பாவிக்கும் திரைச்சீலை என்பது இன்று அம்பலமாகி உள்ளது. இது ஒடுக்கும், ஒடுக்கப்படும் மக்கட் குழுக்கள் இரண்டினதும் முதலாளித்துவ இயக்கங்களைப் பொறுத்தமட்டில் முழு உண்மையாகும்.

இந்நிலைமையின் கீழ் இந்த மிலேச்ச முதலாளித்துவ ஆட்சியாளர்கள் மக்கள் உரிமைகளை காப்பர் அல்லது அவர்களின் நலன்களை வழங்குவர் எனக் கூறி அந்த ஆளும் வர்க்கத்துக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அரசியல் தலையீட்டை தவிர்க்கும் சீர்திருத்தவாத, ஸ்டாலினிச, குட்டிமுதலாளித்துவ தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள் ஒரு கொலைகார பாத்திரமாகும், சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி, ஜே,வீ,பி, ஜனதா மித்துரோ அமைப்புக்களதும், பாலாதம்பு உட்பட்ட சகல தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும், பல்வேறு தீவிரவாத புத்திஜீவி கும்பல்களதும் நடவடிக்கை இதற்குச் சாட்சிபகர்கின்றது. இவர்களுள் ஏதேனும் ஒருவர் தமது இனவாத பிற்போக்கினை கோவணத்துள் மறைத்துக்கொண்டும், ஏகாதிபத்திய நிறுவனங்களின் நிதிகளில் வயிறு வளர்த்துக் கொண்டும் தமிழ் மக்களைப் பற்றியும் ஜனநாயக உரிமைகளையும் வாழ்க்கைத் தரத்தையும் ஒழிப்பதைப் பற்றியும் இடைக்கிடையே முதலைக் கண்ணீர் வடித்தாலும் இவர்கள் சகலரும் இனவாத யுத்தத்தினதும் முழு நாட்டையும் இராணுவமயமாக்குவதன் வக்கீல்களாகவும் பரிணாமம் கண்டுள்ளனர்.

பத்திரிகைச் சுதந்திரத்தினை நசுக்கும் இராணுவத் தணிக்கை தொடர்பாக சமசமாஜக் கட்சி வெளியிட்ட அறிக்கை இச்சகலரதும் துரோகத்தினை எடுத்துக் காட்டுகின்றது. சமசமாஜக் கட்சி கூறியது இதுதான்:

''வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில் ஒரு பகுதியினர் சமீப காலமாக இராணுவ இரகசியங்கள் என கருதக் கூடியவற்றை பொறுப்பற்ற முறையில் போட்டியிட்டு அறிக்கை செய்வதில் ஈடுபட்டனர் என்பது சமசமாஜக் கட்சி அறியாதது அல்ல. தமது உளவு நடவடிக்கைகளுக்காக விடுதலைப் புலிகளுக்கு இந்த அடிப்படை நிலைப்பாட்டைப் பேணும் அவசியம் கிடையாது. எனினும் இத்தகைய நடவடிக்கைகள் ஆயு

தப் படைகளை தைரியம் இழக்கச் செய்யவும் அவர்களை மனக்குழப்பம் அடைய செய்யவும் இடமுண்டு. பொதுஜனச் தொடர்புச் சாதன சொந்தக்காரர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடர்பான தமது எதிர்ப்பினை மறைத்துக் கொள்ள முடியாததால் அவர்கள் மீது ஒழுக்கவியல் நெருக்குவாரங்களைக் கொணர்வதன் மூலம் பலன் கிட்டாது.

''இராணுவ நிலைமையின் உச்சிக்கு ஏறிக்கொள்ள அரசாங்கம் செய்யும் முயற்சியை ஸ்தம்பிக்க வைக்கும் அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. எந்த வகையிலானதும் எந்த மட்டத்திலானதுமான தணிக்கை தொடர்பாகவும் மகிழ்ச்சி தெரிவிக்கவும் சமசமாஜக் கட்சியினால் ஈர்க்கப்பட்டுவிட முடியார்து போனாலும் இந்த வகையிலான செய்திகளை போடுவதை தவிர்க்க நடவடிக்கை எடுப்பது சரியானது எனக்கருதுகின்றது.''

இந்த அறிக்கை சகல பழைய அரசியல் கட்சிகளதும் அமைப்புக்களதும் முற்று முழுதான பிற்போக்கு பரிணாமத்தினை எடுத்துக் காட்டுகின்றது. 1964ல் சமசமாஜக் கட்சி முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டரசாங்கத்தில் சேர்ந்ததன் மூலம் இழைத்த மாபெரும் காட்டிக் கொடுப்பின் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனமும், செயற்பாடும் மூடிமறைக்கப்பட்டதன் பின்னர் உருவானதும் இன்றைய உலக நெருக்கடி நிலைமையின் கீழ் வெடித்துச் சிதறும் நிலைமையை எட்டியுள்ளதுமான சமூக நெருக்கடியின் கீழ் ல.ச.ச.க. உட்பட்ட இச்சகல பழைய அமைப்புக்களும் முதலாளித்துவ அரசினதும் அதன் ஆயுதப் படைகளதும் சர்வாதிகார முயற்சியின் இட்டவட்டமான பங்காளிகள் வேலையில் இறங்கி உள்ளனர். ''இராணுவ நிலைமையின் உச்சிக்கு ஏறிக்கொள்ள அரசாங்கம் எடுக்கும் முயற்சி'' அரசியல் நிலைமையின் உச்சிக்கு இராணுவத்தினை அழைக்கும் முயற்சியேயன்றி வேறெதுவும் அல்ல, சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ—இ. தொ, கா கட்சிகளும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் குட்டி முதலாளித்துவ இயக்கங்களும் தமிழ் இனச் சங்காரத்தில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் தைரியத்தை சீர்குலைக்காமல் இருக்கவும்— அவர்களை குழப்பியடிக்காமல் இருக்கவும் வழி பார்த்துக் கொண்டுள்ளனர். 1987—90 காலப் பகுதியில் தெற்கில் ஒரு இலட்சம் பாடசாலை மாணவர்களும் தொழில் அற்ற இளைஞர்களும்



டயர் தீயில் சுட்டுப் பொசுக்கப்பட்ட சமயத்தில் இத்தலைவர்களில் ஒருவர் தன்னும் ''இராணுவத்தை தைரியம் இழக்கச் செய்கின்றதும் குழப்பியடிக்கின்றதுமான'' வேலைகளில் ஈடுபடவில்லை என்பதை வர்க்க நனவுபடைத்த சகல தோழர்களும் நினைவில் கொண்டாக வேண்டும். அவர்களின் இன்றைய நடைமுறையானது முழுத் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களையும் ஒழித்துக் கட்டும் பொருட்டு இராணுவ சர்வாதிகாரத்துக்கு குறிகாட்டுவதாகும்; முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்கு மூண்டு கொடுப்பதாகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சமீபத்திய வரவு செலவுத் திட்டம் இந்த மிலேச்ச காட்டுமிராண்டித் தனத்துக்கு அர்ப்பணம் செய்த ஒரு வரவு செலவுத் திட்டமாக விளங்குகின்றது. இராணுவச் செலவினங்கள் கடந்த ஆண்டின் ரூபா 2200 கோடிகளில் இருந்து 3700 கோடிகளாக அதிகரித்துள்ளது, இது கடந்த ஆண்டில் ஒதுக்கிய நிதியைக் காட்டிலும் நூற்றுக்கு 58.5 வீதம் அதிகமானதாகும்.

உழைக்கும் வயதில் இருந்து வரும் சனத் தொகையின் ஒவ்வொரு 55 பேருக்கும் ஒருவர் அளவில் இப்போது இராணுவத்துக்கும் — பொலிஸ் படை அணிகளுக்கும் திரட்டப்பட்டுள்ளனர். இராணுவ சர்வாதிகாரத்தினை ஏற்கனவே அமைத்துக் கொண்டுள்ள நாடுகளில் கூட காணமுடியாத அளவுக்கு பிரமாண்டமான ஒன்றாகும், இவர்கள் பலாக்களை வெட்டுவதற்கு அன்றி பொதுமக்களை வெட்டித் தள்ளும் ஆயுதங்களால் ஆயுதபாணியாக்கப்பட்டு உள்ளனர் என்பதையிட்டு சந்தேகம் கிடையாது.

இந்த இராணுவமயக் கொள்கைக்கு ஏகாதிபத்தியவாதிகள் ஆதரவளிக்க காரணம் அவர்களின் வங்கி அமைப்புக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களையும்வட்டிகளையும் அடைக்கவும், ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் கீழ் இடம்பெற்றுவரும் மிலேச்ச உழைப்பு சுரண்டலின் மூலம் இலாபம் திரட்டவும் அது அத்தியாவசியமாக இருப்பதேயாகும். நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதையிட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதுவிதமான அக்கறையும் கிடையாது. அவர்களின் ஒரே இலக்கு காலனித்துவ அடிமைத்தனத்தினை கொண்ட நர்டுகளையும் பிராந்தியங்களையும் வைத்திருப்பதும் இதன் மூலம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை கசக்கிப் பிழிந்து சுரண்டுவதன் மூலம் சாக்கு

களை நிரப்பிக் கொள்வதேயாகும். அதற்காக இன்றுள்ள நாடுகளை பிரிக்க வேண்டுமானால் அதற்கும் அவர்கள் செயற்படுகின்றார்கள். இவ்விரு பாணியிலுமான முயற்சிகளிலும் காட்டுமிராண்டித் தனத்துக்கு குறைச்சல் இல்லை. பொதுஜன முன்னணி அரசாங்கம் யூ.என்.பி.யைக் காட்டிலும் பெரிதும் முன்னேறி அந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இம்முறை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் ட்ரான்ஸ்'நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கும் பெரும் வரிச் சலுகைகள் மூலம் வருமானத்தைக் குறைத்துக் கொண்டுள்ள அதே வேளையில் 1996ல் ஏகாதிபத்திய வங்கியாளர்களுக்கு 8000 கோடி ரூபாக்களை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யுத்தச் செலவுகளும் ஏகாதிபத்திய வங்கியாளர்களுக்கு செலுத்தும் பணமும் அரசாங்கத்தின் வருடாந்த வருமானத்தில் நூற்றுக்கு 74.2 வீதமாகும். இது மொத்த தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 14.2 வீதமாகும்.

ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுக்கு வேண்டிய மிலேச்ச வேலைகளுக்கென தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள முதலாளித்துவ அரச இராணுவமும் நாட்டின் பொருளாதாரத்தினை கைப்பிடிக்குள் கொணர்ந்துள்ளது என்பதை இப்புள்ளி விபரங்கள் காட்டவில்லையா? அதன் நாசகார விளைவுகளுக்கு முகம் கொடுப்பது இந்நாட்டின் செல்வத்தை உழைக்க தமது உழைப்பை செலவிடும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களும் அவர்களின் குடும்பங்களும் அல்லவா?

இராணுவ நடவடிக்கைகள் மற்றும் கடன், வட்டி கொடுப்பனவுக்காக செலவிடப்படும் நிதி தவிர்ந்த ஏனைய சகல அரசாங்கச் செலவினங்களுக்குமான மதிப்பீடுகளும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் நூற்றுக்கு 10 வீதத்தினால் பொதுவில் வெட்டப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் இந்த இலட்சணத்தில் அரசாங்கத்தினாலேயே வெட்டித்தள்ளப்படுவது என்பது மக்களுக்கு பெரிதாக நீட்டிவிட்டு அதை தட்டிப் பறித்துக் கொள்ளும் ஒரு மோசடியாகும். சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ —இ.தொ.கா—தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் உதவி கிடைக்காத ஒரு அரசாங்கத்தினால் இத்தகைய தட்டிப் பறிக்கும் கைங்கரியங்களை நிறைவேற்ற முடியாது.

அரசாங்கங்கள் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை



குறைக்க வேண்டும் என்பது இன்று ஏகாதிபத்திய வங்கியாளர்கள் பொதுவில் சகல நாடுகளுக்கும் இட்டுள்ள கட்டளைகளில் ஒன்றாகும். முதலாளித்துவ அரசாங்கங்கள் வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறையை குறைக்காததையிட்டே ஏகாதிபத்தியச் சார்பு எதிர்ப்புக் கூக்குரல்கள் எழுப்பப்படுகின்றன. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான யூ.என்.பி. விமர்சனங்கள் இதனால் மாறிவிடாது. வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை முதலாளித்துவ அரசாங்கங்கள் பொதுமக்களின் உதவி மானியங்களை வெட்டிச் சரிப்பதன் மூலமே குறைத்துக் கொள்கின்றன. அதனால் பொதுமக்களின் மேல் சகிக்க முடியாத சுமைகள் திணிக்கப்படுகின்றன.

## 1410 மில்லியன் வெட்டு

அரசாங்க நிர்வாகச் செலவுக்காக பொதுஜன முன்னணியினால் மதிப்பிடப்பட்ட 14100 மில்லியன் ரூபாய்களில் நூற்றுக்கு 10 சதவீதம் அதாவது 1410 மில்லியன் ரூபாய்கள் வெட்டப்பட்டுள்ளன. அவ்வாறே மூலதனச் செலவுகளில் இருந்து 2400 மில்லியன் ரூபாய்கள் வெட்டப்பட்டுள்ளது. இந்த வெட்டுக்கள் தொழிலாளர்களின் தொழில்கள் முழு ஒடுக்கப்படும் மக்களும் அனுபவிக்கும் கல்வி, சுகாதார சேவைகள் உட்பட்ட உதவி மானியங்கள் அனைத்தையும் மோசமாக சுருக்கிக் கொண்டுள்ளது.

ஏற்கனவே விவசாய மானியத்தை வெட்டியதன் மூலமும் சந்தை போட்டிகள் மூலமும் கசக்கிப் பிழியப்பட்டு—சகிக்க முடியாத கடன் சுமையாலும் வறுமையாலும் வாடும் இலட்சோப இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களை தலையெடுக்க முடியாத ஆதாள பாதாளத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கம் தள்ளியுள்ளது. விவசாயத்துக்கும் புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள ட்ரான்ஸ்நஷனல் விவசாய கூட்டுத்தாபனங்கள் ஏழை விவசாயிகளின் வாழ்க்கையை துடைத்துக் கட்டும், பொதுஜன முன்னணி அரசாங்கம் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் வழங்கியுள்ள சலுகைகளின் அடிப்படையில் நாட்டுக்குள் ஊடுருவும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் ஏழை விவசாயிகளின் பயிர்ச் செய்கை நிலங்களையும் தம் பிடிக்குள் கொணரும், விவசாயிகளின் எதிர்ப்புக்கள் மூலம் இதுவரை பின்தள்ளப்பட்டு வந்த தண்ணீர் வரியும், ஏக்

கர் வரியும் இடிமுழக்கம் போல் அவர்களின் தலைகளில் வெடிக்கும். இதனால் பயிர்ச் செய்கையை தொடர முடியாத அவல நிலைக்குள் தள்ளப்பட்டு வாழ்க்கைக்கு மார்க்கம் இன்றி தவிக்கத் தள்ளப்படும் ஏழை விவசாயிகள் இடையே இடம்பெறும் தற்கொலைகளை டசின் கணக்கில் அல்லாமல் பல்லாயிரக் கணக்கில் கணக்கிடும் காலம் நெருங்குகின்றது.

ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபன முதலீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பரந்த வரி சலுகைகள் மூலம் வழங்கப்படுவது வெறும் பொருளாதார ஊக்குவிப்பு மட்டும் அன்று. அது அரசியல் ஊக்குவிப்பும் ஆகும். ''தொழிலாளர் சாசனம்'' எனப்படுவதில் என்னதான் வரையப்பட்டு இருந்தாலும் அரசாங்கமும் முதலாளித்துவ அரசும் தொழிலாளர்களுக்கு எதிராக தமது நலன்களை உத்தரவாதம் செய்ய சபதம் செய்துகொண்டுள்ளன என்பதை வெளிநாட்டு உள்நாட்டு முதலீட்டாளர்கள் புரிந்துகொண்டுள்ளனர். நாடு பூராவும் உள்ள தொழிலாளர்களுக்கும்— சிறப்பாக சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களுக்கு எதிராக கொடிய தாக்குதலை முதலாளித்துவ வர்த்தகர்களை தொடுக்கும் படி இது தூண்டிவிடுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பியகம அன்சல் லங்கா பக்டரி போராட்டத்திலும் கொரியன் சிலோன் 'உள்ளமர்வு போராட்டத்திலும் தொழிலாளர்களை கொலை செய்யும் பொலிஸ் தாக்குதல்களை தொடுத்ததும் தொழிலாளர்களின் சம்பளக் கோரிக்கைகளை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திப் போடும்படி பயமுறுத்தியதன் மூலமும் தயார் செய்யப்பட்ட தொழிலாளர் விரோத அரசியல் பின்னணியினை தாண்டிச் செல்லும் விதத்திலான மிலேச்ச ஒடுக்குமுறை நிலைமைகளை ஒரு ஆண்டு ஆட்சியில் இருந்ததன் பின்னர் பொதுஜன முன்னணி இன்று தயார் செய்துள்ளது. தமிழ் மக்களுக்கு எதிரான ''ரிவிரச இராணுவ நடவடிக்கை''யின் வெற்றி எனப்படுவதன் நிழலின் கீழேயே இந்த எதிர்ப்புரட்சி உஜாருக்கான பாதையை வெட்டிக்கொண்டுள்ளது என்பதை நினைவூட்டுவது அவசியம். அந்தப் பிற்போக்குக்கு எதிரான தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாதப் புரட்சிகரக் கூட்டின் அவசியம் பற்றிய விளக்கத்தையும் வர்க்க நனவுள்ள சகல தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் கைவரப் பெற்றாக வேண்டும்.



இனவாத யுத்தத்தினைத் தொடரவும், தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களின் மேல் இராணுவ சர்வாதிகாரத்தினைத் திணிப்பதற்கு அவசியமான ஏனைய சகல செலவுகளையும் அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் தோட்டத் துறையையும் சேர்ந்த சொத்துக்களை ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கும் அவற்றுடன் சேர்ந்த உள்ளூர் தேசியமுதலாளி வர்க்க வர்த்தகர்களுக்கும் விற்றுத் தள்ளுவதன் மூலம் தேடிக் கொள்கின்றது. இதன் மூலம் எதிர்வரும் வருடத்தில் அரசாங்கத்தின் உத்தேச வருமானம் 2100 கோடி ரூபாய்களாகும்.

## புகைச் சுருள் சோவினிசம்

கடந்த ஆண்டில் சந்தையில் ஏலத்தில் விடப்பட்ட திணைக்களங்களதும் கூட்டுத்தாபனங்களதும் சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் விற்பனையாகவில்லை. இதற்கு முக்கிய காரணம், ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் முதலீட்டாளர்கள் எதிர்பார்த்த விதத்தில் தொழில் அழிப்பு வேலை துரிதப்படுத்தலுக்குமான நிலைமைகளை செய்து கொடுப்பதால் பொதுஜன முன்னணி அரசாங்கம் இன்னமும் வெற்றி காணாது போயுள்ளதேயாகும். தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கி அதன் புகைச் சுருளின் அடியில் சோவினிச ஜும்பல்களைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் இராணுவத்தின் கையைப் பலப்படுத்தவும் அதன் மூலம் ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகியுள்ள தொழிலாளர்கள் மேல் தொழில் அழிப்பு ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் அடிமை உழைப்புச் சுரண்டலை திணிக்கவும் முடியும் எனவும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் அதனை அரவணைத்துக் கொண்டுள்ள சகல துரோகத் தலைவர்களும் இன்று கணித்துக் கொண்டுள்ளனர். தோட்டத் துறை, உருக்குக் கூட்டுத்தாபனம், தொலைத் தொடர்பு திணைக்களம், மின்சார சபை, அரச வங்கிகள், புகையிரதம், மக்கள்மயப்படுத்தப்பட்ட பஸ் சேவை முதலிய திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களை தனியார்மயமாக்குவது என்பது இலட்சக் கணக்கான தொழில்களை அழிப்பதுடன் இணைந்து கொண்டுள்ளது. நாட்சம்பளத் திட்டத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதத்துக்கு 26 நாட்கள் வேலை வழங்குவதை தனியார் கம்பனிகள் ஏற்கனவே நிராகரித்து உள்

ளன, தோட்டத் துறையில் உபரி மனித கூட்டம் இருந்து வருவதாகவும் அதை ஒழிக்க வேண்டும் எனவும் யூ,என்.பீ.யின் அன்றைய தலைவரான காமினி திசாநாயக்க கூறிவந்தார், இன்று பொதுஜன முன்னணி அரசாங்கம் இதனை நடைமுறைக்கிட உள்ளது.

இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கத்திலுள் சமசமாஜ —கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் உட்கார்ந்து கொண்டுள்ள அத்துலத் முதலி கும்பல் அன்று தொழிலாளர்களை கனத்தைக்கு அனுப்ப வேண்டும் என வாயடித்த லலித் அத்துலத் முதலியின் விதிமுறையை அவர் சேர்ந்திருந்த யூ,என்.பீ. செய்ததைக் காட்டிலும் நன்றாக பொதுஜன முன்னணி நடைமுறைக்கு இடும் விதத்தினைக் கண்டு இதயம் குளிர்ந்து கரகோசம் செய்வார்கள்.

## சமசமாஜ செயலாளர் பாராட்டு

இந்தளவு பிரமாண்டமான பேரழிவுக்கு தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் முழுமையாகப் பலிக்கடாக்களாக்கும் பேரில் லங்கா சம சமாஜக் கட்சி செயலாளர் பற்றி வீரக்கோன் ''யுத்த நிலைமையின் கீழ் இதைக் காட்டிலும் பெரிதும் மோசமான ஒரு வரவு செலவுத் திட்டத்தை தாம் எதிர்பார்த்ததாக'' கூறிக் கொண்டுள்ளார். இது வெறுமனே பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு சரிகைப்பட்டு உடுப்பது மட்டும் அன்று. அக்கட்சி இனவாத யுத்தத்திற்கும் நாட்டினை இராணுவமயப்படுத்தவும் தாம் அதற்குத் தோள் கொடுக்கவும் எவ்வளவு தோள் கொடுத்துள்ளார்கள் என்பதையும் தாம் ஆட்சியில் முன்னிலை வகிக்கின்ற மக்களை எந்தளவு மோசமான விதத்தில் கணிக்கப் போகின்றார்கள் என்பதையும் இது காட்டிக் கொண்டுள்ளது. இத்துரோகத் தலைவர்களின் பிடியிலும் செல்வாக்கிலும் இருந்து முடிந்தமட்டும் விரைவில் மீளவுபடுவதும், அந்த தலைவர்களை வர்க்க இயக்கத்தில் இருந்து வெளியேற்றி புரட்சிகர தலைமையை ஸ்தாபிதம் செய்வதும் இன்று தட்டிக்கழிக்க முடியாத அவசரப் பணியாகியுள்ளது. இதை அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

17 ஆண்டு கால யூ,என்.பி, ஆட்சியின் கீழும் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழும் வேலையில்லாப் பிரச்சினையை தீர்ப்பதாக பச்சைப் பொய்கள் கூறியுள்ள போதிலும் அப்பிரச்சினைக்கு முதலாளித்துவ அமைப்பின் கீழ் தீர்வு கிடை



யாததோடு மட்டுமன்றி இன்றைய நிலைமையின் கீழ் சகல நாடுகளிலும் இப்பிரச்சினை உக்கிரம் கண்டுள்ளது. இப்பிரச்சினைக்கு சோசலிச அமைப்பின் கீழ் மட்டுமே தீர்வு காண முடியும். அந்தப் பாதையை திறப்பதற்காக முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசுவதோடு அந்தப் பணியில் முன்னணி புரட்சிகர சமூகச் சக்தியான தொழிலாளர் வர்க்கத்தினைச் சூழ ஒடுக்கப்படும் இளைஞர்களையும் அணிதிரட்டியாக வேண்டும்.

இங்கு தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர உதவிச் சக்தியென்ற முறையில் இளைஞர்கள் இட்டு நிரப்ப வேண்டிய பாத்திரம் அற்ப சொற்பம் அல்ல, எனினும் ஜே.வீ,பீ. அதன் கைத்தேங்காயான அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் முதலானவையும், ஜே.வீ.பீ,யின் பாசிச சம்பிரதாயங்களை முன்னெடுத்துச் செல்லும் ''ஜனதா மித்துரோ'' அமைப்பும் இளைஞர்கள் இடையேயும் சிறப்பாக அதன் நனவான பகுதியினரான மாணவர்களிடையேயும் தொழிலாளர் வர்க்கப் புரட்சிகர சோசலிச இயக்கத்தின் வளர்ச்சிக்கு உயிராபத்தானவர்களாக நின்று கொண்டுள்ளனர். முதலாளித்துவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகி கதிகலங்கிப் போன குட்டி முதலாளித்துவ பிரிவில் இடம் பெற்றுள்ள இந்த அமைப்பு குட்டி முதலாளித்துவத்தின் புரட்சிகரச் சக்தி தொழிலாளர் வர்க்கத்தின் முற்போக்கு சக்திகளுடன் அணிதிரள்வதற்கு எதிரியாக உள்ளது. இதற்கு காரணம் இந்தக் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் அனைத்தும் முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசுவதற்கு எதிராக உள்ளமையே ஆகும். வரலாற்று ரீதியில் நிர்ணயம் செய்யப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர உண்மைகளை கண்டனம் செய்யும் பொருட்டு அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தின் துரோகிகளான சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ—இ.தொ.கா மற்றும் தொழிற்சங்க தலைவர்களின் துரோகங்களைப் பற்றி வாயடிக்கிறார்கள். வர்க்க நனவு கொண்ட இளைஞர்களே இதைச் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள்! குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின் இலக்கு தங்களை வேட்டையாடி பலி கொடுப்பதன் மூலம் தங்களின் பெற்றோர்களான தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் துவம்சம் செய்யும் இராணுவ சர்வாதிகாரத்துடன் சேர்ந்து காட்டுமிராண்டி முதலாளித்துவ அமைப்பின்

கீழ் தமக்கு வாய்ப்புத் தேடிக்கொள்வதேயாகும். முதலாளித்துவ ஆட்சி முறையை தூக்கி வீசும் பொருட்டு புரட்சிகரத் தொழிலாளர் வர்க்கத்தின் உதவிச் சக்தியாகத் தொழிற்படுவதன் மூலம் முதலாளித்துவ சொத்துடமையை ஒழித்துக் கட்டி சோசலிச சொத்து முறையை ஸ்தாபிதம் செய்வதன் மூலமேயன்றி வேறு வழியில் வேலையின்மை, கல்வி வசதிகள் இல்லாது போன இளைஞர்களின் எதிர்காலத்தை கட்டி எழுப்ப முடியாது. இந்த முற்போக்கு தீர்வுப் பாதைக்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் இளைஞர் இயக்கமான இளம் சோசலிஸ்டுகள், இளம் சோசலிஸ்டுகள் மாணவர் இயக்கமும் மட்டுமே போராடுகின்றன.

தமிழ் மக்களது உரிமைகளை மட்டுமன்றி தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் எந்தவொரு பிரிவினரதும் ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளையும் ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தின் கீழ் இன்று பேண முடியாது, மனித இனம் இதுகாறும் உயிர்வாழ்ந்த மட்டத்தில் வாழ்க்கை ஓட்டுவதற்குத் தன்னும் முதலாளித்துவ அமைப்பை நாட்டுக்கு நாடாகவும் உலகளாவியரீதியிலும் தூக்கி வீச வேண்டும்.

உலக சோசலிசத்தின் பேரில் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவாகி இருந்த நிலைமைகளின் கீழ் தொழிலாளர் வர்க்கம் தனது அரச அதிகாரத்தினை ஸ்தாபிதம் செய்வது துரோகத் தலைவர்களால் தவிர்க்கப்பட்டதன் பெறுபேறாக மனித இனம் இதுகாறும் செலுத்த நேரிட்ட நஷ்டஈடு பிரமாண்டமானது. இரண்டு உலக யுத்தத்துக்கு—தொடர்ந்து ஏற்பட்டு வந்த அழிவு மிக்க கொள்ளையடிப்புக்கள் இனவாத மோதுதல்கள், பாசிச மக்கட் படுகொலைகள் முதலான பல அழிவுகளுக்கும் தடுக்கக் கூடிய இயற்கை அழிவுகளுக்கும் மனித இனம் முகம் கொடுக்க நேரிட்டதற்கு மிலேச்ச முதலாளித்துவத்தின் மரணத்தை தள்ளிப் போட வாய்ப்புக் கிட்டியதன் பெறுபேறே காரணம்.

முதலாளித்துவம் உலகளாவிய ரீதியில் வீழ்ச்சிக்கு முகம் கொடுத்துள்ள இன்றைய நிலையில் உலகம் பூராவும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்கும் இந்த அழிவுகள் பல்மடங்காக உக்கிரம் கண்டுள்ளது, பல புள்ளி விபரங்களை ஆராய்ந்து பார்க்கும் போது இது ஊர்ஜிதம் ஆகின்றது.

உலகில் ஏழைகளான நூற்றுக்கு 20 வீதமான சனத்தொகையில் அடங்குவோருக்கும்



செல்வந்தர்களான நூற்றுக்கு 20 வீதமானோரில் அடங்குவோருக்கும் இடையேயான வருமானப் பகிர்வு பாகுபாடு கடந்த மூன்று தசாப்தங்களுள் மூன்று மடங்காக அதிகரித்ததாக அறிவிக்கப்பட்டது, சமீபகால புள்ளிவிபரங்களின் படி சனத்தொகையின் இவ்விரு சாராரும் பெற்றுக் கொள்ளும் வருமானத்திற்கு இடையேயான வேறுபாடு 1:150 என்ற விகிதத்தில் பரந்துள்ளது. முதலாளித்துவத்தின் முன்னணி நாடாகக் கொள்ளப்படும் அமெரிக்காவில் 1990ல் இருந்த நிலைமையின்படி அங்குள்ள நூற்றுக்கு இருபது ஏழைகளுக்குள் அடங்கும் சனத்தொகையினரின் வருமானம் முழுத் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 3.7 வீதமாக இருக்கையில் செல்வந்தரான நூற்றுக்கு 20 வீதமானோரினுள் அடங்குவோர் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 50 வீதத்துக்கும் அதிமான பங்கினைப் பெற்றுக் கொள்கின்றனர்,

பொதுமக்கள் முகம் கொடுக்கும் இந்த உக்கிரமான வறுமை நிலை சிறுவர்கள், முதியோர்கள், பெண்கள் தொடர்பாக பெரிதும் நாசகரமானதாக உள்ளது. உலகில் இன்று ஒவ்வொரு இரண்டு வினாடிக்கும் ஒரு சிறுவன்—ஒரு நாளைக்கு 43,2000 சிறுவர்கள் பட்டினியால் இறக்கிறார்கள். இது இம்மக்களுக்கு அவசியமான உணவு, பானங்களையும் ஆடை அணிகளையும் உற்பத்தி செய்ய இயலாமையால் ஏற்பட்ட ஒரு நிலைமையல்ல. இது அளவுக்கும் அதிகமாக அவை அனைத்தையும் உற்பத்தி செய்யக் கூடிய வளங்களும் சக்தியும் மனித இனத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு நிலையில் இலாப வெறிபிடித்த முதலாளி வர்க்கத்தின் கீழ் இடம்பெறும் ஒன்றாகும்.

இந்நிலையில் இலங்கையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் அல்லது உலகின் எந்தவொரு நாட்டிலும் அல்லது முதலாளித்துவ ஆட்சி முறையின் கீழ் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளைப் பேண முடியும் என நினைப்பது உயிராபத்தான நப்பாசையாகும் எனப் புதிதாகக் கூற வேண்டியதில்லை. இலங்கையைப் பொறுத்தமட்டில் அத்தகைய ஏமாற்றம் ஏனைய நாடுகளைப் பார்க்கிலும் பெரும் உயிராபத்தானது.

ஆனால் சமசமாஜ-கம்யூனிஸ்ட்—நவசமசமாஜ-இ.தொ, கா, மலையக மக்கள் முன்னணி, தொழிற் சங்கங்கள் உட்பட்ட ஏனைய சகல துரோக அதிகாரத்துவங்க

ளும் அதிகாரத்துவங்களும் மக்களின் கண்களில் மண்தூவவும் அவர்களை புதைகுழிகளுக்கு இட்டுச் செல்லவும் பயங்கரமான நப்பாசைகளை பரப்பி வருகின்றார்கள்.

சமசமாஜ — கம்யூனிச மற்றும் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டு கொலைகார வேலைகளின் பங்காளிகளாக விளங்குகையில் அரசாங்கத்தின் வெளியில் இருந்து கொண்டு அதற்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் அதை நல்வழிப்படுத்த முடியும் என்ற மோசடியை நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் பரப்பி வருகின்றார்கள். குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்களின் பேச்சாளராக உலகம் பிரசித்தி பெற்ற காலஞ்சென்ற ஏர்ணஸ்ட் மண்டேலின் அனைத்துலகம் எனப்பட்டதன் பங்காளிகளாக விளங்கும் விக்கிரமபாகு கருணாரத்ன—லீனஸ் ஜயதிலக கும்பல், தமது குழுவின் நச்சுத்தனமான வேலைகளையும் தாண்டும் பிற்போக்கு வேலைத்திட்டங்களின் வீரர்களாகியுள்ளனர். தமிழர் விரோத இனவாதத்தினால் விஷம் ஏறிய பாசிச இயக்கமான ஜே.வீ.பி,யுடன் கூட்டுக்குச் செல்ல துடிக்கும் நவசமசமாஜக் கட்சி தொழிலாளர் வர்க்கத்தினுள் அவர்களுக்கு கால் வைக்க இடமளிக்கும் வரை அந்த இடத்தினை முதலாளித்துவ இராணுவத்துக்கு துடிக்கும் பாசிசச் சக்திகளுக்கு வீதி சமைக்க பயன்படுத்தும். இராணுவ சர்வாதிகாரத்தின் கூலிப் படையைப் போல் செயல்படும் பாசிச இயக்கத்தின் அவசியத்தினை புரிந்து கொண்டு தொழிற்படும் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினதும் அதன் கையாட்களான சமசமாஜ—கம்யூனிச — இ.தொ,கா, மலையக மக்கள் முன்னணி கட்சிகளதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் முக்கிய மூண்டுகோலாக நவசமசமாஜக் கட்சி தொழிற்படுகின்றது. ந.ச.ச.க, துரோகிகளை தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து வெளியேற்ற புரட்சிகரப் போராளிகள் நடாத்த வேண்டிய போராட்டம் தட்டிக் கழிக்க முடியாத ஒன்றாகியுள்ளது.

சகல துரோகத் தலைவர்களதும் நெருக்குவாரத்தில் இருந்து தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் விடுவித்து அவர்களை சுயாதீனமான தொழிலாளர் வர்க்க அரசியல் விதிமுறையின் அடிப்படையில் நிறுத்துவது முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதற்கு பொதுமக்களை அணிதிரட்ட அவசியமானது.

இத்துரோக அரசியலின்



பெறுபேறாக தொழிலாளர்– ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் இனவாத பாசிச இயக்கங்களின் அச்சுறுத்தல் மீண்டும் தலைதூக்கும் ஆபத்து உருவாகியுள்ளது, ஜே.வீ.பி. காரர்கள் பல ''ஒப்புதல் வாக்கு மூலல்களை'' வழங்கி உள்ள போதிலும் அதன் பிற்போக்கு நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதில்லை, இதற்கிடையே ஜே.வீ.பி.யில் இருந்து பிரிந்து சென்ற ''ஜனதா மித்துரோ'' காரர்கள் இனவாத யுத்தத்தினதும் இராணுவத்தினதும் சல்லாரிக்காரர்களாகவும் தொழிலாளர் வர்க்க அரசியலின் படு எதிரிகளாகவும் இருந்து கொண்டு பாசிச ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் இனவாத யுத்தத்துக்கு எதிராக மத்தறையில் நடாத்தப்பட்ட கூட்டத்தினை பொலிஸ்—இராணுவ கும்பலுடன் சேர்ந்து தாக்கியதன் மூலம் ஜனதா மித்துரோ அமைப்பு அதனது பாசிச தன்மையை ஏற்கனவே காட்டிக் கொண்டுள்ளது.

அரசாங்கச் சார்பற்ற அமைப்புக்களின் மகாநாட்டை சிதறடிக்கும் பொருட்டு பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கையாட்களுடன் சேர்ந்து இனவாதக் குண்டர்கள் பொலிசாரின் உதவியோடு நடாத்திய தாக்குதல் வளர்ச்சி கண்டு வரும் இராணுவ சர்வாதிகாரத்தினதும், பாசிச கும்பல்களதும் வளர்ச்சியை பிரத்தியட்சமாக்கியுள்ளது, அடியுண்டோர் பொதுஜன முன்னணியை ஆட்சிக்கு கொணர துடித்த பிற்போக்காளர் என்ற விடயம் இருந்து வருகையிலும் இது அவர்களுக்கு எதிரான தாக்குதலை காட்டிக்கொண்டதற்கு காரணம் முதலாளித்துவ எதிர்ப் புரட்சிக்கு எதிரான போராட்டத்தில் இறங்கும் தொழிலாளர் — ஒடுக்கப்படும் போராளிகள் முகம் கொடுக்க நேரிடும் மிலேச்ச அடக்குமுறையையேயாகும்

முதலாளித்துவ பத்திரிகை பைத்தியங்கள் இந்த பாசிஸ்டுகளுக்கு தினமும் வழங்கி வரும் பிரச்சாரங்கள் பெரிதும் கணக்கிட்டு செய்யும் ஒன்றாகும். தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் மூலம் முதலாளித்துவ ஆட்சி ஆட்டம் காணும் நிலையில் இராணுவ — பொலிஸ் படைகளுடன் ஒன்றாக ஈடுபடுத்தக் கூடிய குட்டி முதலாளித்துவ பாசிச படையணிகளின் அவசியத்தை உலகம் பூராவும் உள்ள ஆளும் வர்க்கம் புரிந்து கொண்டுள்ளது. பிரேமதாச ஆட்சியின் கீழ் தொழிலாளர்

களை ஒடுக்கும் பொருட்டு ஜே.வீ.பி.யை கொலைகார அலுகோசு கும்பல்களாக பயன்படுத்தியதன் மூலம் இலங்கையின் முலலாளித்துவ ஆளும் வர்க்கம் அத்தகைய இயக்கங்களின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்கனவே புரிந்து கொண்டுள்ளது, காட்டுமிராண்டி முதலாளித்துவ ஆட்சியாளர்கள் அத்தகைய குட்டி முதலாளித்துவ கும்பல்களை எந்தவிதத்தில் துச்சமாக மதிக்கிறார்கள் என்பது ஜே.வீ,பி.க்கு எதிராக கொடுக்கப்பட்ட அடக்குமுறை காட்டிக் கொண்டது. இருப்பினும் கதிகலங்கிப்போன குட்டி முதலாளித்துவ அரசியல் இயக்கம் அதிலிருந்து கற்றுக்கொள்ளும் படிப்பினை கிடையாததோடு அவர்கள் தமது வர்க்க நலன்களின் பேரில் முதலாளித்துவ மிலேச்ச வேலைகளின் பங்காளிகளாக மாறுவதையும் கைவிட்டதும் கிடையாது,

குட்டி முதலாளித்துவமும், மத்தியதர வர்க்க சமூகப் பிரிவினரும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ள முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொடுக்கப்படும் தாக்குதலில் அதன் நனவான சிறந்த பகுதியினரை தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்துக்கு எதிராக சுயாதீனமான அரசியல் தலைமையை அவர்களுக்கு வழங்கின் மட்டுமே முதலாளித்துவத்துக்கு எதிராக அணிதிரட்ட முடியும்.

தொழிலாளர் வர்க்கம் இப்பணியை இட்டுநிரப்ப முதலாளித்துவச் சார்பு மக்கள் முன்னணி துரோகத் தலைவர்களை வர்க்க இயக்கத்தில் இருந்து வெளியேற்றி, புரட்சிகர வேலைத்திட்டத்தினாலும் புரட்சிகர தலைமையினாலும் ஆயுதபாணியாக்கப்பட வேண்டும். இன்றைய அவசரப்பணி, அத்தகைய ஒரு வேலைத் திட்டத்தினை தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் நனவான மத்தியதர வர்க்கப் பகுதியினரதும் கலந்துரையாடல்களுக்கு உள்ளாக்கி நிறைவேற்றுவதே, அத்தகைய ஒரு தைரியம் கொண்ட ஆரம்பத்தினை எடுக்க தயார் செய்யப்பட்ட காரியாளர்களைக் கொண்ட புரட்சிக் கட்சியை கட்டியெழுப்வுவதே.

பிரபாகரனை பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் சரி, விடுதலைப் புலிகளை அழிந்தொழித்தாலும் சரி அழிக்காவிட்டாலும் சரி விடுதலைப் புலிகளுடன் பிற்போக்கு கூட்டினை ஏற்படுத்தினாலும் சரி இல்லாவிட்டாலும் சரி முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் கீழ் தேசிய ஜனநாயக சமத்துவம் பற்றிய பிரச்சினையை தீர்க்க முடியாது. அத்தகைய ஒன்று ஊர்ஜிதம் செய்யப்படாத ஒரு நிலையில் இனவாத குத்துவெட்டுக்களும் யுத்தங்களும் முடிவுக்கு வராது. தபால் ஊழ்யர்களின் நிஜ கோரிக்கைகளின் அடிப்படையிலான போராட்டத்தை நசுக்க இன்று இனவாத யுத்தம் பயன்படுத்தப்படும் விதத்தையும் அத்தொழிலாளர்களுக்கு எதிராக குட்டி முதலாளித்துவ மண்டி வர்க்கத்தினை தூண்டிவிடும் விதத்தையும் காணக் கூடியதாக உள்ளது. முதலாளித்துவ ஆட்சி இருக்கும் வரை இப்பேரழிவில் இருந்து தலையெடுக்க முடியாது.



புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஏற்கனவே இனவாத யுத்தத்துக்கு எதிராக நாடு பூராவும் பிரச்சாரத்தில் ஈடுபட்டதோடு யூ.என்,பீ- பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் கீழ் செய்யப்பட்டுள்ள தொழிலாளர் ஒடுக்குமுறைகள் பற்றி சுயாதீனமான தொழிலாளர் விசாரணைக் கமிட்டிகளை நடைமுறைப்படுத்தியும், இரணவில ''அமெரிக்கன் குரல்'' யுத்த நிலையத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்டியும், தோட்டத் துறையில் தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டியும் தொழிற் சங்கங்களுள் துரோகத் தலைவர்களை துரத்தியடிக்க போராடியும், இளைஞர்கள், மாணவர்களை புரட்சியாளர்களாக பயிற்றி எடுக்க தொழிற்பட்டும், கிராமப்புற படுகொலைகளுக்கு எதிராகவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் போராட்டத்தில் ஈடுபட்டும், விவசாயிகளின் ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளை காக்கும் பொருட்டு சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் இடைமருவு வேலைத் திட்டத்தினை முன்வைத்தும் 27 ஆண்டுகளாக போராடிய வரலாற்று உரிமை படைத்து. இவை அனைத்தும் துரோகத் தலைவர்களுக்கு எதிராக தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் ஆரம்பங்களாகும். இச்சகல பிரச்சார நடவடிக்கைகளும் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் நனவூட்டி, அணிதிரட்டி முதலாளித்துவ அமைப்பை தூக்கி வீசுவதற்கான நடவடிக்கைகளாகும். ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவைப் பெற்ற தொழிலாளர்- விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்பதற்காகும், எனவேதான் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பதாகையின் கீழ் போராடும் பு.க,க,வை சூழ சகல போராளிகளும் அணிதிரளும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக நனவான முறையில் அணிதிரட்டும் புதிய அமைப்பு வடிவத்தை கட்டி எழுப்ப வேண்டும். சகல பழைய அமைப்புக்களும் பிற்போக்குடன் இணைந்து கொண்டுள்ள ஒரு நிலையில் இதன் அவசியம் தலைதூக்கியுள்ளது. தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் கொண்ட நடவடிக்கைக் குழுக்களை சகல வேலைத்தலங்களிலும் தொழிலாளர் —ஒடுக்கப்படும் மக்களின் வதிவிடங்களிலும் கட்டியெழுப்புவது அத்தியாவசியம். முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக சக்தி வாய்ந்த ஒரு வர்க்க ஐக்கியத்தினை அதன் மூலம் கட்டியெழுப்ப வேண்டும். பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளித்துவ அரச படை அணிகளும் தொழிலாளர்களுக்கும் சிங்கள, தமிழ் தேசிய இனங்களைச் சேர்ந்த ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக தொடுக்கும் மக்கட் படுகொலை ஒடுக்குமுறையை தோற்கடிக்கும் பொருட்டு பாதுகாப்பு அணிகளும் இந்த நடவடிக்கைக் குழுக்களின் வழிகாட்டலின் கீழ் அமைக்க்ப்பட வேண்டும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த நடவடிக்கை குருக்களை கட்டியெழுப்பும் பொருட்டு நடாத்திவரும் பிரச்சாரத்தில் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் மத்தியில் உள்ள சகல நிஜ போராளிகளையும் அதில் சேர்த்துக் கொள்ள அக்கறை காட்டுவதோடு முதலாளித்துவ அரசுக்கும் அதன் அரசாங்கத்துக்கும் இராகம் பாடும் அதிகாரத்துவங்களை அக்கமிட்டிகளில் இருந்து வெளியேற்ற மக்கள் செயற்படுவர் எனவும் எதிர்பார்க்கின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழுவின் இந்த அறிக்கை மேற்சொன்ன புரட்சிகரப் பணியை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த முன்னோக்கினையும் வேலைத்திட்டத்தினையும் வர்க்க இயக்கத்தினுள் விரிவான முறையில் கலந்துரையாடும் படியும் அவசியமான விளக்கத்துடன் புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்ப சபதம் பூணும்படியும் நாம் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்கள் போராளிகளை வேண்டுகின்றோம்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஜனவரி 21ல் கூட்டும் தொழிலானர்—ஒடுக்கப்படும் மக்கள் மாநாடு, அனைத்துலக சோசலிசத்தின் முன்னோக்கின் கீழ் இந்தியத் துணைக் கண்ட சோவியத் குடியரசின் ஒரு பாகமாக — இலங்கை — ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்புதற்கு அவசியமான புரட்சிக் கட்சியை கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டுள்ளது.



## தொழில்களை காப்பாற்று!

## சகலருக்கும் தொழில்!

★ தொழில்களுக்கு ஆபத்து ஏற்பட்ட சகல இடங்களிலும் தொழிலாளர் வேலைத் தலங்களை கைப்பற்றிக் கொள்ள முன்நிற்க வேண்டும், தொழில்களை கைப்பற்றும் பொருட்டு தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் ஏனைய பகுதியினரின் ஆதரவைத் திரட்ட உள்ளமர்வு கமிட்டிகளை அமைக்க வேண்டும்,

★ வேலைநீக்கம் செய்யப்பட்ட சகல தொழிலாளர்களுக்கும் பூரண சம்பளம் வழங்கு! திரும்பவும் சேவையில் அமர்த்தும் போது அவரவர்க்கு உரிய சம்பள மட்டத்தில் அமர்த்த வேண்டும்,

★ சகல ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களையும் தற்காலிக தொழிலாளர்களையும் நிரந்தரமாக்க வேண்டும்.

★ புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் சகல தொழில்களிலும் வேலை நேரம், சம்பளம் வெட்டப்படாது குறைக்கப்பட வேண்டும், வேலையை சகல தொழிலாளர்களிடையேயும் பகிர வேண்டும்,

★ இனவாத யுத்தச் செலவுகளை நிறுத்து! முதலாளித்துவ வர்க்கத்தின் சுகபோக செலவுகளை ஒழித்து, பொருளாதார கொடுக்கல் வாங்கல்களில் ஊழல்கள், கமிஷன் மோசடிகளை அகற்றுவதோடு இவை சகலருக்கும் புதிய தொழில் வழங்கப் பயன்படுத்தப்பட வேண்டும்.

## ஏழைகளில் சகல உதவி மானியங்களையும் காப்பாற்று

★ அகற்றப்பட்ட சகல உதவி மானியங்களையும் திரும்பவும் வழங்கு!

★ தொழில் வழங்கப்படும் வரை சகல வேலையற்ற இளைஞர்களுக்கும் மாதக் கொடுப்பனவும் வழங்கு!

★ பாடசாலை மாணவர்களின் இலவச மதிய உணவை திரும்பவும் வழங்கு! இலவசக் கல்வி வசதியை வழங்கு!

★ விவசாயிகளின் உதவி மானியத்தை திரும்பவும் வழங்கு! விவசாய செலவு அதிகரிப்பதோடு சுயமாக அதிகரிக்கும் உதவிமானியம்!

★ சகல முதியோர்களுக்கும் ஒய்வூதிய திட்டத்தை உருவாக்கு!

**வாழ்க்கைத் தரத்தைக் காப்பாற்று!**

★ குறைந்த பட்ச சம்பளத்தை ரூபா.5000/- ஆக்கு

★ பெண் தொழிலாளர்களுக்கு சம சம்பளம் கொடு!

★ தோட்டத் தொழிலாளருக்கு மாதச் சம்பளம் வழங்கு

★ அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சுயமாக அதிகரிக்கும் சம்பளத் திட்டத்தை ஏற்படுத்து

**வீடில்லாப் பிரச்சினையை தீர்த்து வை**

★ ஏழை மக்களுக்கு பொது வீடமைப்புத் திட்டம் வழங்கும் பொருட்டு அரச செலவை அதிகரி

★ செல்வந்தர்களிடம் அதிகமாக உள்ள வீடுகளை சுவீகரித்து, வீடில்லாதோருக்கு செலுத்தக் கூடிய வாடகைக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தை உருவாக்கு!

★ சகல வீடுகளுக்கும் தண்ணீர், மின்சாரம், சௌக்கிய வசதிகளை வழங்கு!

**இலவசக் கல்வியை காப்பாற்று**

★ நாடு பூராவும் போதிய அளவிலான பாடசாலைகளை நிர்மாணி!

★ சகல பாடசாலைகளுக்கும் சமமான வசதிகள்

★ சித்தியடைந்த சகலருக்கும் பல்கலைக் கழக கல்வியை வழங்கு

★ இணைப்பு பல்கலைக் கழகங்கள் என்ற மோசடியை நீக்கு

★ போதிய ஆசிரியர் பயிற்சி வழங்கு

★ ஆசிரியர் சம்பளங்களை கூட்டு

★ மாணவர்களின் ஒருங்கு கூடும் ஜனநாயக உரிமையை காப்பாற்று!

★ பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு கலைத்துறை திறமைகளை அபிவிருத்தி செய்யும் வசதிகளை வழங்கு!

★ கல்வித்துறை நிபுணர்களின் தொடர்புடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கொண்ட கமிட்டிகளை நிறுவி, பாடசாலை மாணவர்களின் பாடத்திட்டத்தினையும் அவசிய வசதிகளையும் தீர்மானம் செய்!

**இலவச, சுகாதார சேவையை ஊர்ஜிதம் செய்**

★ நவீன சிகிச்சை முறைகளுடன் நாடு பூராவும் ஆஸ்பத்திரி முறையை விஸ்தரிக்கவும்

● தனியார் ஆஸ்பத்திரிகளை தேசியமயமாக்கு!

● வைத்திய, தொழில் நுட்ப ஊழியர்களுக்கு பயிற்சி!

● இலவச மருந்துகளுக்கு நிதியீட்டம் செய்வதை கூட்டு

**பாதுகாப்பான வேலை நிலைமைக்காக**

● பாதுகாப்பான தொழில் நிலைமையைச் சிபார்சு செய்து, ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு சகல வேலைத் தலங்களிலும் தொழிலாளர் சபைகளை நிறுவு

● பயங்கரமான வேலை நிலைமைகளின் கீழ் தொழில் புரிவதை நிராகரிக்க வேண்டும்

● கைத்தொழில் விபத்துக்கள், சுகாதார அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கும் தொழிலாளர்களுக்கு பூரண நஷ்டஈடு! வேலைத் தலங்களுக்கு சுகாதார வசதிகளை வழங்கு

● பயங்கர நிலைமைகளின் கீழ் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு பூரண சம்பளத்துடன் கூடிய முன்கூட்டிய ஓய்வூதியம் பெறும் உரிமை. சகல தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய 6 வார வருடாந்த விடுமுறை.

**ஒருங்கு கூடும் உரிமை**

● தொழிலாளர்களின் ஒருங்கு கூடும் உரிமையைக் காப்பாற்று!

● தொழிற் சங்கங்களுக்கு எதிரான தாக்குதலை நிறுத்து

● தொழிற் சங்கங்களில் இருந்து கோபரேட்வாத அதிகாரத்துவத்தை அகற்று!

● ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளின் உதவியுடன் தொழிலாளர் நடவடிக்கை கமிட்டிகளை அமை. முதலாளித்துவ கட்சிகளினதும் வர்க்க உடனுழைப்பு அதிகாரத்துவத்தினதும் பிரதிநிதிகளை நடவடிக்கை குழுக்களில் இருந்து நீக்கு!

**தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை காப்பாற்று!**

● தோட்டத் தொழிலாளர்களுக்கு பூரண குடியுரிமை

● தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் மற்றும் ஒடுக்குமுறை சட்டங்களை நீக்கு

● தோட்டத் தனியார்மயத்தை நீக்கு! தோட்டங்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் நஷ்டஈடு இல்லாமல் தேசியமயமாக்கு

## ஏழை விவசாயிகளின் உரிமைகளைக் காப்பாற்று

● சகல நிலங்களையும் தேசியமயமாக்கு! விளைச்சலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விவசாய நிலத்துண்டுகளின் உரிமையை உறுதி செய்

● பௌத்த விகாரைகள், தேவாலயங்கள், பள்ளிகளின் காணி உரிமையை அகற்றி அந்நிலங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோரின் உரிமையை உறுதி செய்!

● சகல விவசாயக் கடன்களையும் ஒழித்துக் கட்டு

● விவசாய உற்பத்திகளுக்கு உத்தரவாத விலையை ஏற்படுத்து

● விவசாய உற்பத்திகளுக்கு சந்தையில் இலாபம் ஈட்டும் தரகர்களை அகற்று

● விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதாந்த சம்பளத்தை ஏற்படுத்து

● விவசாயத்துக்கு அவசியமானவற்றை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் விவசாயக் கமிட்டிகளை நிறுவு!

## இளைஞர்களின் உரிமை

● இளைஞர்களின் தொழிற் பயிற்சிக்கான வசதிகளை வழங்கு

● பயிற்சிக் காலத்தில் போதுமான உதவி நிதி வழங்கு

● பாடசாலைகளை விட்டு வெளியேறுவோருக்கு தொழில் பெறும் வரை உதவி நிதி வழங்கு

● சிறுவர் உழைப்பை நிறுத்து! அரசாங்க பயிற்சித் திட்டத்தின் கீழ் அவர்களை தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களாக்கு

● இளைஞர்களின் பொழுதுபோக்குக்காக அரச செலவில் வசதிகளை செய்து கொடு

## இனவாத யுத்தத்தை நிறுத்து! தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்!

● இனவாத யுத்தத்தினை நிறுத்து! இது எமது யுத்தம் அல்ல

● யுத்தத்துக்கு ஒரு சதமோ ஒரு ஆளோ வழங்காதீர்கள். யுத்தத்துக்கு அவசிய பொருட்களை போக்குவரத்து செய்யாதீர்கள்

● இனவாத யுத்தத்துக்கு இளைஞர்களை வலுக் கட்டாயமாக திரட்டுவதை எதிர்ப்போம்

● பாதுகாப்பு வரியை நீக்க, இனவாத யுத்தத்துக்காக தொழிலாளர்களின் சம்பளத்தை வெட்டுவதை நிறுத்து!



● வடக்கு—கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

● தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் சாட்டில் இடம் பெறும் இந்திய, ஏகாதிபத்திய தலையீடுகளை நிறுத்து

● சிங்கள—தமிழ் தொழிலாளர்களிடையே ஐக்கியத்தை ஊர்ஜிதம் செய்! தேசிய இனங்கள் இரண்டினதும் ஒடுக்கப்படும் மக்களை அச்சமூக சக்திகளின் கீழ் அணிதிரட்டு

● சிறீலங்கா—தமிழ் ஈழம் ஐக்கிய சோசலிச குடியரசினை நோக்கி முன்னேறு!

## கிராமப்புற படுகொலையை நிறுத்து

● சிங்கள—தமிழ் சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்

● சகல அரசியல் படுகொலைகளையும் விசாரணை செய்ய சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டியை நிறுவு

● அவசர காலச் சட்டம், பயங்கரவாதக் தடைச் சட்டம் ஆகியவற்றை ரத்துச் செய்

● சகல வேலைத்தலங்களிலும் நாடு பூராவும் தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டிகளையும் பாதுகாப்பு படை அணிகளையும் நிறுவு. இந்தச் சுயாதீன விசாரணைக் கமிட்டிகளின் மூலம் சட்ட விரோத காடையர் கும்பல்களதும் பாசிச கும்பல்களதும் போக்குவரத்துக்களையும் நடவடிக்கைகளையும் விசாரித்து அம்பலப்படுத்து

## வீட்டுப் பெண்களதும் மகளிரதும் உரிமைகளைப் பாதுகாப்போம்

● பெண் தொழிலாளர்களுக்கு சமசம்பளம்

● இரவு வேலைகளுக்கு பெண்களை அமர்த்துவதை நிறுத்து

● பெண் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக வீடுகள் நிறுவு

● பாலூட்டும் தாய்மாருக்கு சகல வேலை நாட்களிலும் சம்பளத்துடன் மூன்று மணித்தியால விடுமுறை

● வைத்திய சிபாரிசுப்படி முழுச் சம்பளத்துடன் கூடிய மகப்பேற்று விடுமுறை

● சகல கிராமங்களிலும் மகப்பேற்று ஆஸ்பத்திரிகள் நிறுவு!

● மகளிருக்கு கருச்சிதைவு செய்யும் உரிமை வழங்கு

● சகல தொழிலற்ற வீட்டுப் பெண்களுக்கும் மாத சம்பளம் கொடு

## கலாச்சாரம், கலை, விஞ்ஞானம்

● வெளியீடுகள், கலை, கலாச்சார நடவடிக்கைகளின் மீதான சகல தணிக்கைகளையும் நீக்கு

● கலாச்சார, கலை, விஞ்ஞானத் துறைகளில் தொழில்சார் பேர்வழிகள் தமது கலைகளை அபிவிருத்தி செய்ய பூரண வசதிகள் வழங்கு!

● தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் கலாச்சார நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வசதிகள் வழங்கு!

● சகல பெரும் வெளியீட்டுக் கம்பனிகள் திரைப்பட கம்பனிகளை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் நஷ்டஈடின்றி தேசிய மயாக்கு

● வானொலி, தொலைக்காட்சி நிர்வாகத்துக்காக தொழிலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகளைக் கொண்ட ஒரு பணிப்பாளர் சபையை நிறுவு

## ● அரசியலமைப்புச் சட்டசபை

● புதிய அரசியலமைப்புச் சட்டத்துக்காக தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களை கொண்ட நடவடிக்கை குழுக்களை (சோவியத்துக்கள்) அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு நிர்ணய சபையை நிறுவு

● பொலிசார் உட்பட்ட சகல அரச படைகளையும் கலைத்து விடு! தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் பாதுகாப்பு கமிட்டிகள் மூலம் மக்களின் பாதுகாப்பை ஒழுங்கு செய்

● சகல மக்கட் பகுதியினரதும் முழு ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்று!

## பெரும் கம்பனிகளின் கணக்கேடுகளை திறந்து விடு

● சகல பெரும் கம்பனிகளதும் கணக்குகளை பரீட்சிக்கும் பொருட்டு தொழிலாளர் கமிட்டிகளை நிறுவு!

● முதலாளிகள் தமது தனிப்பட்ட இலாபத்துக்காக தேசிய செல்வத்தை சுரண்டுவதை அம்பலப்படுத்து!

● உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகள் இடையேயான உறவுகளை அம்பலமாக்கு!

## அடிப்படைக் கைத்தொழில்களையும் அடிப்படை கூட்டுத்தாபனங்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கு



● சகல பெரும் கைத்தொழில்களையும் வர்த்தக கம்பனி, ட்ரான்ஸ்நஷனல் முதலீடுகள், வங்கிகள், பெரும் தோட்டங்களை நஷ்டஈடு இல்லாமல் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கு!

● தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு கடன் கொடுக்காது இருக்கும் முதலாளிகளின் சொத்துக்களை கைப்பற்று!

● தொழிலாளர்களதும், ஒடுக்கப்படும் மக்களதும் நன்மைக்காக தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து முறையை நிறுவு!

● வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகத்தை நிறுவு!

● ஏகாதிபத்திய வங்கிகளுக்கு உள்ள சகல கடன்களையும் நீக்கு!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு இந்த அறிக்கை இந்த புரட்சிகரப் பணியை இலக்காகக் கொண்டுள்ளது, இங்கு முன் வைக்கப்படும் முன்நோக்கினையும் வேலைத் திட்டத்தினையும் முடிந்த மட்டும் பரந்த அளவில் வர்க்க இயக்கத்தினுள் கலந்துரையாடும்படியும் வேண்டிய விளக்கங்களுடன் புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்ப அர்ப்பணம் செய்யும்படியும் நாம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் போராளிகளை வேண்டுகின்றோம்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஜனவரி 21ம் திகதி கூட்டும் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் மாநாட்டில் அனைத்துலக சோசலிச முன்நோக்கின் கீழ் இந்தியதுணைக் கண்ட சோவியத் குடியரசின் ஒரு பாகமாக இலங்கை—ஈழம் சோசலிசக் குடியரசினை கட்டியெழுப்ப அவசியமான புரட்சிக் கட்சியை கட்டி எழுப்புவதை இலக்காகக் கொள்கின்றது.

வாசியுங்கள்!

சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

— கீர்த்தி பாலசூரிய

விலை— ரூபா 20

# தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் மகாநாடு

**இனவாத யுத்தத்துக்கும் இராணுவமயமாக்கலுக்கும்**

**எதிராக சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரள்வோம்**

**1996 ஜனவரி 21 மு.ப 10—பி.ப 5 மணி வரை**

**கொழும்பு பொதுசன நூல்நிலைய கேட்போர் கூடம்**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் – இளம் சோசலிஸ்டுகள்

---

தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் மகாநாட்டில் கலந்து கொள்ள விரும்புகின்றேன்

பெயர்: ....................................................

முகவரி: ....................................................

....................................................

....................................................

**வேலைத்தலம்/பாடசாலை/பல்கலைக்கழகம்:**

....................................................

கையொப்பம்: ....................................................

**கூப்பனை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி;**

செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு–10,

---

**சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!**

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!

பெயர் ....................................................

முகவரி: ....................................................

....................................................

....................................................

தொலைபேசி இலக்கம்; ....................................................

அமைப்பு: ....................................................

**இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:**

செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10,

தொழிலாளர்
பாதை

ISBN 955-9123-37-8

10.00